6 ஆண்டுகளில் சொந்த வருமானத்திலோ அல்லது செலவிலோ 10 சதவிகிதம், 12 சதவிகிதம் என்று நாம் இலக்கு வைக்கிறோம். அதில் அடைவது என்னவோ 5 சதவிகிதம், 7 சதவிகிதம்தான். ஆனால், 2021–2022, 2022–2023 ஆம் ஆண்டுகளுக்கு MTFP (Medium Term Fiscal Plan) அடிப்படையில் எடுத்திருக்கிற forecast–ஐ பார்த்தால் எனக்குக் கொஞ்சம் அதிசயமாக இருந்தது. ஏனென்றால் இரண்டு வருடங்களிலும் முறையே 14 சதவிகிதம், 14 சதவிகிதம் வளர்ச்சி அடையும் என இந்த forecast–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் நான் இதை நம்பவில்லை. ஏனென்றால் பொருளாதாரச் சூழ்நிலை தற்போது மோசமாக உள்ளது. பொருளாதாரம் பற்றி எனக்குத் தெரிந்த அளவிற்கு தற்போது இது improve ஆகக்கூடிய சூழ்நிலையில் இல்லை. அதற்குப் பிறகுதான் எனக்கு திடீரென்று தெரிந்தது. நிதித் துறை என்ன செய்திருக்கிறது என்றால், 2021–2022, 2022–2023 ஆம் ஆண்டுகளில் மற்றொரு ஆட்சி, அதாவது எங்களுடைய தலைவர் தலைமையில் ஒரு ஆட்சி வரும் என்பதனால் (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு 14 சதவிகிதம் வளர்ச்சி பெறும் என்ற அளவில் நிதித் துறையில் கணிப்பு செய்திருக்கிறார்கள். ஆகவே, சரியாகத்தான் கணித்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது. அதையும் நான் பாராட்டுகிறேன். இத்துடன், இந்த வாய்ப்பை வழங்கியமைக்கும், இவ்வளவு நேரம் நான் பேசியதற்கு மரியாதை வழங்கியமைக்கும் அனைவருக்கும் நன்றிகூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(அ) குடியுரிமை திருத்தச் சட்டத்தை திரும்பப்பெறும் வகையில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுதல் மற்றும் சென்னை, வண்ணாரப்பேட்டையில் நடைபெற்றுவரும் போராட்டம் குறித்து—*தொடர்ச்சி*

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு தேவையற்ற, ஒரு தவறான தகவலை இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறார். வண்ணாரப்பேட்டையில் திட்டம்போட்டு இந்தப்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2020 பிப்ரவரி 17

போராட்டத்தைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். ** என மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். இது உண்மைக்குப் புறம்பான செய்தி. கடந்த டிசம்பர் மாதமே வண்ணாரப்பேட்டையில் உள்ள 16 மசூதிகளைச் சார்ந்திருக்கக்கூடிய இஸ்லாமிய மக்கள் அனைவரும் முஸ்லிம்களின் ஜமாத் கூட்டமைப்பினைத் தொடங்கி போராட்டத்தினைத் தொடங்கியிருக்கிறார்கள். எப்பொழுது? கடந்த டிசம்பர் மாதமே. டிசம்பர் மாதம் 27 ஆம் தேதி மசூதிகள் முன்பு போராட்டம் நடத்தியிருக்கிறார்கள், பொதுக் கூட்டமும் நடத்தியிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் உள்ள சுமார் 5,000 வீடுகளில் கருப்புக் கொடி ஏற்றி தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஜனவரி மாதம் அமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்குச் சென்று மனுவும் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப்பிறகு ஜனவரி 25 ஆம் தேதி வண்ணாரப்பேட்டை ரவுண்டானாவில் மொத்தமாக உட்கார்ந்து மறியல் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அப்போது, சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய போலிஸ் துறை அதிகாரிகள் வருகை தந்து, 'உங்களுக்கு வேறு இடம் தருகிறோம், எனவே, கலைந்து செல்லுங்கள்' என்று சமாதானம் செய்து அவர்களைக் கலைத்திருக்கிறார்கள். அவர்களும் ஏற்றுக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இடம் தராத காரணத்தினால்தான் 14 ஆம் தேதி மீண்டும் அந்தப் போராட்டத்தை அவர்கள் நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால், இந்தப் போராட்டத்தை நடத்தத் தூண்டியது ** என்று ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை இங்கே பதிவு செய்திருக்கிறார். வெளியில் இருக்கக்கூடிய ஒருவரை இங்கே மையப்படுத்தி குற்றச்சாட்டு சொல்வது என்பது மரபல்ல. அவரே சபாநாயகராக இருந்தவர். அவருக்கே இந்த விதிமுறை தெரியும். எனவே, அந்தப் பெயர் இருப்பது முறையல்ல. எனவே, அதனை சபாநாயகர் அவர்கள் நீக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்தைத்தான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொன்னேன். ஒன்றரை மாதமாக 16 ஜமாத்தும் ஒன்றுகூடிப் போராடுகிறார்கள். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லையே! இத்தனைக்கும் சென்னையில் அனுமதிக்கப்பட்ட இடங்கள் எவை? ஒன்று வள்ளுவர் கோட்டம், இரண்டாவது மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இதுபோன்ற சில இடங்கள்தான் அனுமதிக்கப்பட்ட இடங்கள். ஆனால், அவர்களின் அந்த உணர்வுகளை மதிக்கின்ற வகையில், அவர்களுக்கு அனுமதி தரவில்லை என்றாலும்கூட, அமைதியான முறையில் எல்லா ஆர்ப்பாட்டங்களையும் செய்தார்கள். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ** என்று நான் சொன்னேன். அதனால், குற்றம் உள்ள நெஞ்சுதான் குறுகுறுக்க வேண்டும். மடியில் கனம் இல்லையென்றால் வெளியில் ஏன் பயப்பட வேண்டும்? மடியில் கனம் இல்லையென்றால் வெளியில் ஏன் பயப்பட வேண்டும்? நான் ஒன்றும் குற்றம் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) குற்றம் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'அமைதியான முறையில் ஜனநாயகத்தை மதிக்கின்ற இஸ்லாமியர்கள் எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல், சட்டத்தினை மதித்து அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யும் நிலையில் சில விஷமிகள்...' என்று சொன்னார்கள். அந்த விஷமிகள் யார்? அவர் சொன்னதன் அடிப்படையில் நான் என்ன சொன்னேன்? நன்றாக நடந்துகொண்டிருந்தது. ** என்று சொன்னேன். குற்றம் உள்ள நெஞ்சாக இருந்தால் குறுகுறுக்கும். மடியில் கனம் இருப்பவர்களுக்குத்தான் வழியில் பயம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ** பற்றிய குற்றச்சாட்டை இங்கே பதிவு செய்திருக்கிறார். இப்பொழுது நான் சொல்கிறேன், ** என்று நான் சொல்கிறேன். அதைப் பதிவு செய்ய விரும்புகிறீர்களா? அவர் எதை வேண்டுமானாலும் பேசலாமா? அவர் சபாநாயகராக இருந்தவர். எனவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதுதான் மரபு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 40,000 ஓட்டுகள் உள்ளன. கடந்த ஐந்து முறையாக இஸ்லாமியர்களின் 40,000 ஓட்டுகளை வாங்கிக்கொண்டுதான் வந்திருக்கிறேன். அதனால், நேற்றும் சரி, இன்றும் சரி, நாளைக்கும் சரி, என்றைக்குமே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அம்மாவிற்கு ஆதரவு அளிப்பவர்கள்தான் இஸ்லாமிய சகோதரர்கள், நீங்கள் எந்த விஷ விதையை விதைத்தாலும்கூட **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீண் விவாதத்திற்குள் நான் செல்லத் தயாராக இல்லை. அவர் சொன்ன சொல் அவைக்குறிப்பில் பதிவாகி இருக்கலாமா? அதற்கு நீங்கள் தீர்ப்பு தர வேண்டும். (குறுக்கீடு) அதுதான் எங்களுடைய விளக்கம். (குறுக்கீடுகள்) ** என்றெல்லாம் சொல்கிறாரே, நாங்கள் சொல்ல ஆரம்பிக்கட்டுமா? ஒரு அமைச்சர், சபாநாயகராக இருந்தவர், ஒரு அமைச்சராக இருக்கக்கூடியவர், ** என்றெல்லாம் இந்த அவையில் வார்த்தைகளைப் பதிவு செய்கிறாரே, இது நியாயமா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இடையில் நடந்துகொண்டிருக்கின்ற இந்த விவாதம் தொடரக் கூடாது என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

ஏனென்றால், இது பல்வேறு வகைகளில் நீதிமன்றத்தில் இருக்கிறது. இதுகுறித்து மீண்டும் இங்கே தனிப்பட்ட முறையில் விவாதம் இருந்தால், வெளியில் பல்வேறு கருத்துகள், மாறுபட்ட கருத்துகளாக வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதனால், தயவுசெய்து இந்த விவாதத்தை அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நீக்கினால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இரண்டு பேரும், அதாவது மாண்புமிகு எதிர்க்கட்சித்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 பிப்ரவரி 17] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தலைவர் அவர்களும். . . (குறுக்கீடுகள்) தயவுசெய்து பொறுங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் சொல்லிய இரண்டு கருத்துகளும். . . (குறுக்கீடுகள்) குடியுரிமைச் சட்டத்தைப் பற்றி நடந்த வாக்குவாதங்கள் யார் பேசினாலும், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி, அதற்குப் பிறகு அதுசம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதற்குப் பதில் சொன்ன மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பேசிய அந்தப் பதிலையும், இரண்டு பேர் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அது உட்பட நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

5. வரவு–செலவுத் திட்டம், 2020–2021, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது* distinction–*ல் இருந்தது; நீங்கள்* minus–*க்குக் கொண்டு சென்றுவிட்டீர்கள் என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொன்னது சிறிய விளக்கம். அவர் தெளிவாகச் சொன்னார். என்ன சொன்னார் என்றால், 'உதய்' திட்டம் 2017 ஆம் ஆண்டுதான் எடுத்துக்கொள்ளப்பட்டது. எடுத்துக்கொள்ளப்பட்டதற்குப் பிறகு, 22,815 கோடி ரூபாய் கடனை அரசு ஏற்றுக்கொண்டது. அதற்கு வருடத்திற்கு வருடம் 4,500 கோடி ரூபாய் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்த காரணத்தால்தான் 16 சதவிகிதம் என்பது 21 சதவிகிதமாக உயர்ந்ததே தவிர வேறொன்றுமில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அம்மாவின் வழியிலே வந்தவர், அம்மா அவர்கள் கொண்டு வந்ததைப்போல* distinction–*ஐ மட்டும் அல்ல,* distinction plus–*ம் கொண்டு வருவார், பொறுத்திருந்து பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொன்னதைப்போல, 2021 ஆம் ஆண்டு நாங்களே ஆட்சியில் இருந்தால் இதைச் செய்வார்கள்.*